**“மழைநீர் சேமிப்போம்”** **“பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “**

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 12.08.2021.

**<u>நகர்மன்ற அவசரக்கூட்ட அழைப்பிதழ்</u>**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், ஆடி மாதம் 27-ம் நாள் 12.08.2021-ம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

**<u>பொருள் 01 :</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித. ந. எண். **9753/2021**/குவ**2.** நாள். **06.05.2021** ல் கண்டுள்ள கடிதத்தில் உடன் வரப்பெற்ற Affidavit of the Pettioiner ல் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **29**, சுப்பன் தெருவில் வசித்து வரும் . நாள். திரு. கே.ஐ. எம். ஷாஜ்தீன் என்பவர் தனது குடியிருப்பின் குடிநீர் குழாய் இணைப்பு எண். **125/029/00041** ற்கு குடிநீர் கட்டணம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.**600/–** இருந்ததை ரூ. **2820/–** ஆக உயர்த்தியதை ஆட்சேபனை செய்து, சென்னை, உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில், முதல் பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களையும், இரண்டாம் பிரதிவாதியாக ஆணையாளர், தேனி– அல்லிநகரம் நகராட்சி அவர்களையும் சேர்த்துள்ளார்.

எனவே, மேற்கண்ட வழக்கினை நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு. கே.ஹேமா கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகி வாதிடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1372 /2021 / இ2**

**தீர்மான எண் :** 1923
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 02 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், | எண்: 966 நாள்: 15-12-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 156 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 நாள்: 09-12-2020. | ரூ: 44,880/- |

மேற்ககண்ட தொகை ரூ:44,880/- (ரூபாய்: நாற்பத்து நான்கு ஆயிரத்து என்னூற்று என்பது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 24 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1924
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 13.07.2021 ஆம் தேதிய கடித ந.க.எண்.24817/2020/ஜே கடிதத்தில், 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் ஓட்டுநர் பணியில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு ஒரு தங்கப்பதக்கம் அளிக்கும் பொருட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் ஈப்பு எண்.TN60D3884ன் ஓட்டுநராக பணிபுரியும் திரு.க.ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு தங்கப்பதக்கம் வழங்கும் பொருட்டு, இயக்குநர், எழுது பொருள் மற்றும் அச்சகத் துறை, சென்னை அவர்களின் 22.07.2021ஆம் தேதி கடிதத்தின்படி ரூ.25500/=க்கு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்பட்டியலின்படி தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவகக்குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1884 / 2021 / சி1**

**தீர்மான எண் :** 1925

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 04 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி மேற்கு சந்தை தெற்கு பார்த்த காய்கறி கடை நுழைவு வாயில் முன்பு தெற்கு பக்கம் உள்ள காலியிடத்தில் 11 X 16 - 176 ச.அடியில் முன்பொது ஏலம் மூலமாக புதிதாக கடை கட்டுவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்: 903 நாள்: 19-02-2019-ல் அனுமதிக்கப்பட்டது.

மேற்கண்ட கடைக்கு 01-10-2019 அன்று நடைபெற்ற முன்பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் பொருட்டு தலைவர், தேனி மாவட்ட சுமைப்பணி தொழிலாளர் சங்கம், கிளை மேற்கு சந்தை, தேனி அவர்களால் ரூ:4.00 லட்சம் (ரூபாய்: நான்கு லட்சம் மட்டும்) (வங்கி வரைவோலை எண்: 939610 நாள்: 11-06-2019, யூனியன் வங்கி, தேனி) வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் தவைலர், தேனி மாவட்ட சுமைப்பணி தொழிலாளர் சங்கம், கிளை மேற்கு சந்தை, தேனி அவர்களால் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை நகர்மன்ற தீர்மானம் எண்: 1084 நாள்: 16-10-2019-ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட இடத்தில் கடை கட்ட துவங்கியபோது அங்கு கடை கட்டும் பட்சத்தில் தங்களுக்கு இடையூராக இருக்கும் என தினசரி காய்கறி வியாபாரிகள் ஆட்சேபணை செய்ததால், கடை கட்ட முடியாத சூழ்நிலை உள்ளது.

மேற்கண்ட இடத்தில் புதிதாக கடை கட்ட இயலாத சூழ்நிலையில், கடைக்கு செலுத்தப்பட்ட வைப்பத் தொகையினை திரும்ப வழங்கிட கோரும் தவைலர், தேனி மாவட்ட சுமைப்பணி தொழிலாளர் சங்கம், கிளை மேற்கு சந்தை, தேனி அவர்களின் விண்ணப்பம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

அ) மேற்கண்ட இடத்தில் கடை கட்ட இயலாத சூழ்நிலை உள்ளதால் கடை கட்டுவதை ரத்து செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட இனத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரூ:4.00 லட்சத்தினை திருப்பி வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1929 / 2021 / அ-3**

**தீர்மான எண் :** 1926
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 05 :</u>**

இந்நகராட்சியில் 2020 - 2021 ஆம் நிதியாண்டில் ஒப்பந்ததாரர்களிடமும், பணியாளர்களிடமும், பணியாளர்களிடமும் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகை உரிய அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டது. மேற்படி வருமான வரி பிடித்தத்தினை உரியவர்களின் நிரந்தர முகவரி எண்ணிற்கு ( PAN ) மின்னனு வழியாக தாக்கல் ( e - TDC ) செய்தமைக்கு ஏற்பட்ட செலவினத் தொகை ரூ. 3660/- வழங்க கோரிய 05.07.2021 ஆம் தேதிய திரு.கருணையாநந்தன், வருமான வரி தாக்கல் ஆலோசகர், தேனி அவர்களது கேட்புப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ. 3660/-ஐ அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்,.

**ந.க.எண் : 1324 / 2019 / பி2**

**தீர்மான எண் :** 1927
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 06 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி வாரச்சந்தை ஆண்டு குத்தகை இனத்தினை திரு.M.பிரபு, குத்தகைதாரர் 01-03-2021 முதல் 28-02-2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்தள்ளார். தற்போது கொரோனா ஊரடங்கு காரணமாக வியாபாரம் குறைந்துவிட்டதால் தமக்கு நஷ்டம் ஏற்படுவதால் தொடர்ந்து நடத்த இயலாது என தெரிவித்து 31-08-2021 உடன் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்.

எனவே நகராட்சி வாரச்சந்தை வசூல் குத்தகை இனத்தினை 31-08-2021 உடன் நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதுவரையில் துறை மூலம் வசூல் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சிக்கு நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு, அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று குத்தகையினை கையகப்படுத்தி புதிதாக பொது ஏலம் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1952 / 2020 / அ3**

**தீர்மான எண் :** 1928
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:12 கக்கன்ஜி காலனியில் உள்ள சமுதாய கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடும் பொருட்டு நிகழ்வு ஒன்றுக்கு 24 மணி நேரத்திற்கு பராமரிப்பு மற்றும் மின் கட்டணம் உட்படி ரூ:1,200/- (ரூபாய் : ஆயிரத்து இருநூறு மட்டும்) என நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2047 / 2019 / அ3**

**தீர்மான எண் :** 1929
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :

தேனி – அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூட்ட அரங்கில் உள்ள மைக்குகளும், அதற்கு வருகின்ற இணைப்பு வயர்களும் பழுதாகியுள்ளது. இதனால் மேற்கண்ட கூட்ட அரங்கில் ஆலோசனைக்கூட்டம், அலுவல் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடத்துவதில் சிரமமாக உள்ளது. எனவே, ஏற்கெனவே உள்ள 25 எண்ண மைக்குகளை பழுது பார்க்கவும், புதிதாக 12 எண்ணம் புதிய மைக்குகள் வாங்கி பொருத்தவும், மைக்குகளின் இணைப்பு வயர்களின் பழுதுகளை சரிசெய்யவும் அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 68,000/– ( ரூபாய். அறுபத்தி எட்டாயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 1427 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1930
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 09 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 4 - வது வார்டு பகுதியில் உள்ள சின்னக்குளம் கண்மாய் மாசுபடுத்துதலை தடுக்க சுற்றுவேலி அமைத்து, இரும்பு கேட் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.0.50/- இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 2142 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1931
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 10 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 8 - வது வார்டு வீரப்ப அய்யனார் கோவில் செல்லும் சாலையில், சங்கிலி கருப்பன் கோவில் அருகில், சாலையின் குறுக்கே உள்ள சிறுபாலம் மிகவும் தாழ்வாக இருப்பதால் கிழக்குப்பகுதியில் இருந்து வெளியேறும் மழைநீர் சிறுபாலத்தின் வழியே செல்ல இயலாமல் சாலையின் வழியாக வெளியேறி கொண்டு வருவதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. அதனை தவிர்க்கும் வகையில் மேற்படி சிறுபாலத்தை முற்றிலுமாக

அகற்றி விட்டு அதே இடத்தில் ( உயர்த்தி ) புதியதாக சிறுபாலம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.30/- இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 1982 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1932
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 11 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 15-வது மாநில நிதிக் குழு 2020 - 2021 பரிந்துரையின் பேரிலான மானியத் திட்டத்தின் கீழ் ( Tied Crant ) முதல் மற்றும் இரண்டாம் உத்தேச மானியத்தில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.11.2020-ம் நாளிட்ட ந.க.எண். 20452 / 2020 / LA2 கடிதத்தின் சுற்றறிக்கை வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கீழ்காணும் விபரப்படியான பணியினை தேர்வு செய்து ரூ. 148.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளுவதற்கு இந்ககர்மன்றத் தீர்மான எண். 1672, நாள். 08.01.2020-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் வழியாக கருத்து அனுப்பப்பட்டது.

| S. No | Name of Work | Est.Cost ( Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1 | Supply and Erection of 30 TPD Centerlized Incinerator Plant with Infrastuctures for Theni - Allinagaram, Bodinayakanur & Periyakulam Municipalities ( Proportionate Cost for Theni - Allinagaram Municipality) | 148.80 |

இந்நிலையில் நிர்வாக காரணங்களால் மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டு மேற்காணும் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் மாற்று

பணிகளான குடிநீர் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் மதிப்பீட்டு தொகைக்கு கீழ்கண்ட விபரப்படியான பணிகளை மேற்கொள்ளுவதற்கு அனுமதியும், வரிசை எண். 07-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Name of the Work | Est.Cost ( Rs.in Lakhs ) |
|---|---|---|
| 1 | Providing Water Supply Distribution Pipe Line at Balan Nagar & Extension ( Ward No : 03 ) in Theni - Allinagaram Municipality | 25.00 |
| 2 | Providing Water Supply Distribution Pipe Line at New Busstand to SIDCO ( Ward No : 32 ) in Theni - Allinagaram Municipality | 25.00 |
| 3 | Supply and Errection of 25HP Motors with Pannel Board Capacitor at Veerappaayyanar Kovil Scheme Sump in Theni - Allinagaram Municipality for Water Supply | 25.00 |
| 4 | Supplying of HDPE Bins 360 Nos ( 80 Liters Capacity ) and HDPE Bins 60 Nos ( 240 Liters Capacity ) for BOV in Theni - Allinagaram Municipality | 6.00 |
| 5 | Construction of Resource Recovery Centre at 2 Places in Theni - Allinagaram Municipality ( Bus Stand and Old TVS Road, Ward No 32, 30 ) | 18.00 |
| 6 | Construction of Resource Recovery Centre at 2 Places in Theni - Allinagaram Municipality ( Travelers Bungalow and Old Compost Yard, Ward 01, 14 ) | 17.80 |
| 7 | Purchases of 4 Nos LCV Vehicles for Primary Collection in Hilly areas under Solid waste Management | 32.00 |
| | **TOTAL** | **148.80** |

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :-

அ ) வரிசை எண். 01 முதல் 06 வரை குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ஆ ) வரிசை எண். 07-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 224 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1933
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 12 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 08 எண்ணம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8.00/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2144 / 2021 / இ1**

**தீர்மான எண் :** 1934
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் ( மற்றும் )
ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி